**ஜனவரி – 26**

# தமிழ்நாடு செய்திகள்

## செம்மொழி தமிழ் விருதுகள்




- இந்த விருதுகளானது கலைஞர் மு. கருணாநிதி தமிழ் ஆய்வு அறக்கட்டளையினால் வழங்கப் பட்டது.
- தொல்லியல், கல்வெட்டு ஆய்வு, நாணயங்கள், இலக்கியம், புனைவு இலக்கியம், இலக்கிய ஆராய்ச்சி, மொழி பெயர்ப்பு மற்றும் நுண்கலை ஆகிய துறைகளில் சிறந்து விளங்கியவர்களுக்கு இந்த விருதுகள் வழங்கப்பட்டன.
- இந்த விருதுகள் 2010 முதல் மற்றும் 2019 வரையிலான 10 ஆண்டுகளாக வழங்கப் படவில்லை.
- இந்த விருதுகள் பின்வரும் நபர்களுக்கு வழங்கப்பட்டன.
    - பேராசிரியர் பொன். கோதண்டராமன் (2011)
    - பேராசிரியர் E. சுந்திரமூர்த்தி (2012)
    - பேராசிரியர் பா. மருதநாயகம் (2013)
    - பேராசிரியர் கு. மோகனரசு (2014)
    - பேராசிரியர் மறைமலை இலக்குவனார் (2015)
    - கா. ராஜன் (2016)
    - கவிஞர் ஈரோடு தமிழன்பன் (2018)
    - கு. சிவமணி (2019)
- 2010 ஆம் ஆண்டில் தேர்வான டாக்டர் V.S. ராஜம் மற்றும் பேராசிரியர் உல்ரிச் நிகோலஸ் ஆகியோருக்கு இந்த விருதுகள் பின்னர் வழங்கப் படும்.

# தேசியச் செய்திகள்

## இந்தியாவில் மின்சார வாகன விநியோகத்தை வங்கிமுறைக்கு உட்படுத்துதல்

- நிதி ஆயோக் அமைப்பானது சமீபத்தில் இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- இந்திய ரிசர்வ் வங்கியின் முன்னுரிமைத் துறைக் கடன் வழங்கீட்டு வழிமுறைகளில் மின்சார வாகன விநியோகத்தினை உள்ளடக்குவதன் அவசியத்தினைப் பற்றியும்

அதன் முக்கியத்துவத்தினைப் பற்றியும் இந்த அறிக்கை குறிப்பிடுகிறது.

- இந்த அறிக்கையினை, அமெரிக்காவைச் சேர்ந்த இலாப நோக்கமற்ற அமைப்பான ராக்கி மவுன்டேன் இன்ஸ்டிடியூட் (RMI) மற்றும் RMI இந்தியா ஆகியவற்றுடன் இணைந்து நிதி ஆயோக் அமைப்பு உருவாக்கியுள்ளது.




## புலிகள் வளங்காப்பு குறித்த 4வது ஆசிய அமைச்சர்கள் மாநாடு





- மலேசிய அரசு மற்றும் உலகப் புலிகள் மன்றம் ஆகியவற்றினால் சமீபத்தில் இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டது.
- இது உலகப் புலிகள் மீட்புத் திட்டத்தினை நோக்கிய முன்னேற்றம் மற்றும் புலிகள்

வளங் காப்பிற்கான உறுதிப்பாடுகள் ஆகியவற்றை மறுமதிப்பீடு செய்வதற்கான ஒரு முக்கிய நிகழ்வு ஆகும்.

- இந்த ஆண்டின் பிற்பகுதியில் ரஷ்யாவின் விளாடிவோஸ்க் நகரில் நடைபெற உள்ள உலகப் புலிகள் உச்சி மாநாட்டிற்காக புதுடெல்லி பிரகடனத்தை இறுதி செய்வதற்கு, புலிகள் வாழும் பகுதிகளைக் கொண்ட நாடுகளுக்கு இந்தியா உதவி வழங்கும்.
- "உச்சி மாநாட்டிற்கு முந்தைய நிலை மாநாடானது" 2010 ஆம் ஆண்டில் புதுடெல்லியில் நடைபெற்றது.
- இதில், உலகப் புலிகள் உச்சி மாநாட்டிற்காக புலிகள் வளங்காப்பு குறித்த ஒரு வரைவு பிரகடனம் இறுதி செய்யப்பட்டது.

## வீரிய வெள்ளரி (கெர்கின்ஸ்)

- உலகிலேயே அதிகளவில் வீரிய வெள்ளரியை ஏற்றுமதி செய்யும் நாடாக இந்தியா உருவெடுத்துள்ளது.
- இது ஊறுகாய் வெள்ளரி எனவும் அழைக்கப்படுகிறது.
- கர்நாடகாவில் ஒரு சாதாரணத் தொடக்கத்துடன் 1990களின் ஆரம்பகாலத்தில் இந்தியாவில் வெள்ளரிச் சாகுபடி, பதப்படுத்துதல் மற்றும் ஏற்றுமதிகள் தொடங்கின.
- இது பின்னர் தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம் மற்றும் தெலுங்கானா உள்ளிட்ட சில மாநிலங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது.
- உலகின் வீரிய வெள்ளரி உற்பத்தித் தேவையில் கிட்டத்தட்ட 15% அளவிலான உற்பத்தி இந்தியாவில் விளைவிக்கப்படுகிறது.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## 6வது பேரழிவு

- பூமி தனது 6வது பேரழிவை நோக்கிச் சென்று கொண்டிருப்பதாக உயிரியல் மதிப்பீடுகள் (Biological Reviews) என்ற இதழில் வெளியான அறிக்கை கூறுகிறது.
- புவியானது தனது மொத்த உயிரினங்களில் சுமார் 13 அளவிலான சதவீதத்தினை

ஏற்கனவே இழந்திருக்கக் கூடும்.

- இதற்கு முன்பாக சுமார் 65 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற ஒரு பேரழிவு என்பது டைனோசர் இனத்தையே அழித்தது.
- ஹோலோசீன் பேரழிவானது 6வது பேரழிவு அல்லது ஆந்த்ரோபோசீன் பேரழிவு என குறிப்பிடப் படுகிறது.




# மாநிலச் செய்திகள்

## இயங்குபடம், மெய்நிகர் காட்சிகள், விளையாட்டு மற்றும் நகைச்சுவைச் சிறப்பு மையம்

- கர்நாடகாவின் பெங்களூருவில் மகாதேவபுரா எனுமிடத்தில் இயங்குபடம், மெய்நிகர் காட்சிகள், விளையாட்டு மற்றும் நகைச்சுவை ஆகியவற்றிற்கான இந்தியாவின் முதல் சிறப்பு மையத்தினை (Animation, Visual Effects, Gaming, and Comics Center of Excellence) கர்நாடக அரசு திறந்து வைத்துள்ளது.
- இந்தச் சிறப்பு மையமானது, கர்நாடக அரசின் ஒரு புத்தாக்க முன்னெடுப்பின் கீழ், முன்னோடியாகத் திகழும் ஒரு உயர் தொழில்நுட்ப மின்னிலக்க ஊடக மையத்துடன்


(digital media hub) சேர்ந்து தொடங்கப்பட்டது.

- ❖ இதற்கு மின்னணுத் தகவல் தொழில்நுட்பத் துறை & உயிரித் தொழில்நுட்பத் துறை மற்றும் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை ஆகியவை நிதி வழங்குகிறது.
- ❖ இது போன்ற ஒரு மையத்தினை நிறுவிய முதல் இந்திய மாநிலமாக கர்நாடகா மாறி உள்ளது.
- ❖ மேலும் இது ஆசியாவிலேயே ஒரு மிகப்பெரிய மையமாகும்.




## கேரளாவின் முதல் அறிவியல்சார் பறவை வரைபடம்

- ❖ இது போன்ற முதல் வகையிலான மாநில அளவிலான பறவைகள் வரைபடமானது கேரளப் பறவை வரைபட அமைப்பின் மூலம் உருவாக்கப்பட்டது.
- ❖ இது புவிப்பரப்பு மீதான ஒரு பரவலின் அடிப்படையில் ஆசியாவின் ஒரு மிகப்பெரிய பறவைசார் வரைபடம் எனக் கூறப்படுகிறது.




## ஆதி பத்ரி அணை

- ❖ யமுனா நகர் மாவட்டத்தின் ஆதி பத்ரி எனுமிடத்தில் ஓர் அணையைக் கட்டுவதற்கு

ஹரியானா மற்றும் இமாச்சலப் பிரதேச அரசுகள் ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளன.

- இந்த இடம் இமாச்சலப் பிரதேச எல்லையருகே ஹரியானாவில் அமைந்துள்ளது.
- இந்த இடமானது அந்த நதியின் தோற்றப் புள்ளியாகக் கருதப்படுகிறது.
- ஆதி பத்ரியில் அமைக்கப்பட உள்ள அணையானது, யமுனா நகரில் உள்ள ஆதி பத்ரி அருகே பாயும் யமுனா நதியில் கலக்கும் சோம்ப் நதியிடமிருந்தும் நீரினைப் பெறும்.




# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## நாசா கல்வித் திட்டத்தை நிறைவு செய்த முதல் இந்தியர்





- அமெரிக்காவின் அலபாமா எனுமிடத்தில் உள்ள கென்னடி விண்வெளி மையத்தில் நாசாவின் சர்வதேச வான் மற்றும் விண்வெளி கல்வித் திட்டத்தினை ஜான்வி தங்கேடி என்பவர் நிறைவு செய்துள்ளார்.
- இதன் மூலம் இந்தச் சாதனையை நிகழ்த்திய முதல் இந்தியர் என்ற ஒரு பெருமையை இவர் பெற்றார்.
- இவர் ஆந்திரப் பிரதேசத்தைச் சேர்ந்த ஒரு இளம் பெண் ஆவார்.


- இவர் உயர்நோக்கு லட்சியமுள்ள சர்வதேச விண்வெளி வீரர்கள் அமைப்பின் ஒரு உறுப்பினர் ஆவார்.

## நேதாஜி விருது – 2022

- ஜப்பானின் முன்னாள் பிரதமர் சின்சோ அபே அவர்களுக்கு நேதாஜி ஆராய்ச்சிக் கழகம் 2022 ஆம் ஆண்டிற்கான நேதாஜி விருதினை வழங்கியது.
- மேலும் 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் ஜப்பானின் முன்னாள் பிரதமர் சின்சோ அபேவிற்கு இந்தியா பத்மவிபூசன் விருதினை வழங்கியது.
- பத்ம விபூசன் விருதானது இந்தியாவின் 2வது உயரிய குடிமை விருதாகும்.



## ஜெனிசிஸ் பரிசு 2022




- 2022 ஆம் ஆண்டிற்கான மதிப்பு மிக்க ஜெனிசிஸ் பரிசானது ஆல்பெர்ட் போர்லா என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளது.
- இவர் ஃபைசர் நிறுவனத்தின் தலைவர் மற்றும் தலைமை நிர்வாகி ஆவார்.
- கோவிட்-19 தடுப்பு மருந்தினை (பைசர்-பயோன்டெக் கோவிட்-19 தடுப்பு மருந்து) உருவாக்குவதில் அவர் மேற்கொண்ட முயற்சிகளுக்காக இந்த விருதானது வழங்கப் பட்டுள்ளது.
- ஜெனிசிஸ் பரிசு ஆனது “யூத நோபல் பரிசு” என்று பரவலாக குறிப்பிடப்படுகிறது.

## பிரதான் மந்திரி ராஷ்டிரிய பால் புரஷ்கர்

- பிரதான் மந்திரி ராஷ்டிரிய பால் புரஷ்கர் விருது பெற்றவர்களுடன் பிரதமர் மோடி அவர்கள் காணொலி வாயிலாக உரையாடினார்.
- அவர் பிளாக்செயின் (தொடர் சங்கிலி) என்ற ஒரு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மின்னிலக்க முறையில் சான்றிதழ்களை வெற்றியாளர்களுக்கு வழங்கினார்.

- விருது பெற்றவர்களுக்குச் சான்றிதழ் வழங்குவதற்காக வேண்டி முதல் முறையாக இந்தத் தொழில்நுட்பமானது பயன்படுத்தப்பட்டது.
- 14 சிறுமிகள் உட்பட 29 குழந்தைகளுக்கு விருதுகள் வழங்கப்பட்டன.
- புத்தாக்கம், விளையாட்டு, கல்வியியல் சாதனைகள், சமூக சேவை, கலை & கலாச்சாரம் மற்றும் துணிச்சல் (வீரம்) ஆகிய 6 துறைகளில் இவர்களுக்கு விருதுகள் வழங்கப் பட்டன.
- தமிழ்நாட்டைச் சேர்ந்த விசாலினி N.C. மற்றும் அஷ்வதா பிஜு ஆகியோர் புத்தாக்கத் துறையில் விருதுகளைப் பெற்றனர்.




# விளையாட்டுச் செய்திகள்

## மாற்றுத் திறனாளிகளுக்கான முதல் பேட்மிண்டன் பயிற்சி நிலையம்

- இந்தியாவில் மாற்றுத் திறனாளிகளுக்கான முதல் பேட்மின்டன் பயிற்சி நிலையம் உத்தரப் பிரதேசத்தின் லக்னோ நகரில் நிறுவப்பட்டுள்ளது.
- 2024 ஆம் ஆண்டின் மாற்றுத் திறனாளிகளுக்கான ஒலிம்பிக் போட்டிகளில் பதக்கம் வெல்ல வேண்டும் என்ற இலக்கினை இது மேம்படுத்தும்.
- 2024 ஆம் ஆண்டு பாராலிம்பிக்ஸ் போட்டிகளானது பிரான்சின் பாரீஸ் நகரிலுள்ள ஸ்டேடே டி பிரான்ஸ் என்ற மைதானத்தில் நடைபெற உள்ளது.
- இந்தப் பயிற்சி மையமானது இந்திய மாற்றுத் திறனாளிகளுக்கான பேட்மின்டன் அணியின் தேசியத் தலைமைப் பயிற்சியாளர் கௌரவ் கன்னா என்பவரால் ஏஜீஸ் ஃபெடரல் லைஃப் இன்சூரன்ஸ் நிறுவனத்துடன் இணைந்து தொடங்கப்பட்டது.

# முக்கிய தினங்கள்

## சர்வதேச கல்வி தினம் – ஜனவரி 24

- இது உலக அமைதி மற்றும் நிலையான மேம்பாட்டினை உருவாக்குவதில் கல்வியின் பங்கினைக் கொண்டு வருவதற்கானஒரு தினமாகும்.
- இத்தினமானது முதல்முறையாக 2019 ஆம் ஆண்டு ஜனவரி 14 அன்று கொண்டாடப் பட்டது.
- 4வது சர்வதேச கல்வி தினத்தின் கருத்துரு, "Changing Course, Transforming Education"


என்பதாகும்.

- இத்தினத்தின் கொண்டாட்டங்களானது ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல், மற்றும் கலாச்சார அமைப்பு அல்லது யுனெஸ்கோ அமைப்பினால் மேற்கொள்ளப்படுகின்றன.




## தேசியப் பெண் குழந்தை தினம் – ஜனவரி 24

- பெண் குழந்தையின் கல்வி, சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்தினை மேம்படுத்துதல் மற்றும் பெண் குழந்தையின் உரிமைகள் மற்றும் பெண் குழந்தைகள் எதிர்கொள்ளும் சமத்துவமின்மை குறித்த ஒரு விழிப்புணர்வைப் பரப்புவதை இத்தினம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இத்தினமானது, இந்திய அரசின் மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சகத்தினால் 2008 ஆம் ஆண்டில் முதல்முறையாக அனுசரிக்கப்பட்டது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★